# வேலணை மத்திய மகா வித்தியாலயப் பழைய மாணவர்சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகசபைத் தெரிவும்!

வேலணை மத்திய மகா வித்தியாலயப் பழைய மாணவர் சங்கத்தின் நான்காவது வருடாந்தப் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாக சபைத் தெரிவும் கடந்த சனிக் கிழமை டிசம்பர் 18, 1999 அன்று 861 புரோட்வியூ அவனியுவிலுள்ள தமிழீழச் சங்க மண்டபத்தில் சங்கத் தலைவர் திரு.சி.இளஞ்செழியன் தலைமையில் நடைபெற்றது. வழக் கத்திற்கு மாறாக இம்முறை குறிக் கப்பட்ட எண்ணிக்கையான பெண் கள் கலந்து கொண்டது சங்கத்தின் சிறந்த செயற்பாடுகளுக்கு ஓர் எடுத் துக்காட்டாகும். சங்கத் தலைவர் திரு.சி.இளஞ்செழியன் தமது தலைமையுரையில் குறிப்பாகக் கடந்த இரண்டு வருடங்களில் சங்கம் அடைந்த வளர்ச்சிபற்றியும் சங்கம் கல்லூரிக்கும் தாயக மக் களுக்கும் ஆற்றிய அரிய செயற் பாடுகள் பற்றியும் சுருக்கமாக விளக் கிக்கூறினார். மேலும் இந்த வருடம் சங்கத்தின் சிறப்புச் செயற்பாடாகக் கடந்த ஒக்டோபர் மாதம் 9ம் திகதி மிகச்சிறப்பாக நடைபெற்ற கலாதீபம் 99 கலைநிகழ்ச்சி பற்றியும் அதன் வெற்றிகரமான அரங்கேற்றத்தினால் இங்குள்ள மக்கள் மத்தியில் சங்கத் தின்மீது ஏற்பட்ட நன்மதிப்புப் பற்றி யும் குறிப்பிட்டதுடன் கலாதீபம் 99 சிறப்புமலர் பற்றிக் கல்லூரியின் அதிபர் திரு. கு.கணேசலிங்கம் அவர்கள் பாராட்டி எழுதிய கடிதத் தையும் சபையில் வாசித்துக் காட்டி யதுடன் சங்கத்தினர் கல்லூரிக்கு ஆற்றவேண்டிய சேவைகள் பற்றிய அதிபரின் வேண்டுகோள் அடங்கிய கடிதத்தையும் கடந்த நவம்பர் மாதம் முதலாம் திகதி கல்லூரியில் நடைபெற்ற பரிசளிப்புவிழாவின் போது அதிபரினால் வெளியிடப்பட்ட அறிக்கையின் சில பகுதிகளையும்



வாசித்துக்காட்டினார். அவ்வறிக்கை யில் கனடாப் பழைய மாணவர் சங்கத்தினால் நடாத்தப்படும் போசாக்குணவுத்திட்டத்தை அதிபர் நன்கு பாராட்டியிருந்தமை குறிப் பிடத்தக்கதாகும். அடுத்த நிகழ்வாக மீளாய்வு செய்யப்பட்ட அமைப்பு விதிகள் சபையோரின் அங்கீகாரத் திற்குச் சமர்ப்பிக்கப்பட்டுச் சில திருத்தங்களுடன் சபையினரால் ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டது.

சங்கத்தின் எதிர்காலத்திட்டங் கள் பற்றிய சபையோர் குறிப்புரை யில் திரு.வை. சிவநாதன், தீவகம் வே.இராஜலிங்கம், திரு.ந. பேரின்ப நாதன், திரு.ஆ.ச. பத்மநாதன் ஆகி யோர் குறிப்புரை வழங்கினார்கள். திரு.வை.சிவநாதன் தமதுரையில் கல்லூரியில் ஆன்மீகக் கல்வியைப் போதிக்கும் கோரிக்கையை முன் வைத்தபோது சபை ஏகமனதாக ஏற்றுக்கொண்டது. தீவகம் வே. இராஜலிங்கம் அவர்களும் திரு.ஆ.ச. பத்மநாதன் அவர்களும் கல்லூரியில் நூல்நிலையத்தைப் புனரமைக்கும் பொறுப்பைக் கனடா பழைய மாணவர் சங்கம் சார்பில் பொறுப் பேற்கவேண்டும் என்று குறிப்பிட்ட னர். இறுதியில் சங்கத்தின் அடுத் தாண்டுத் திட்டத்தில் நூல்நிலையம் புனரமைப்பதற்கு நிதியுதவியளிப்ப தென்று . சபையில் தீர்மானிக்கப்பட் டது. யாழ். பல்கலைக்கழகத்தின் முன்னாள் விரிவுரையாளரும் கல்லூர யின் புகழ்பூத்த பழைய மாணவர் களில் ஒருவருமான திரு.ந.பேரின்ப நாதன் அவர்கள் தமதுரையில் சங்கத்தின் நிர்வாக சபையினர் தமது பண்பானதும் சிறப்பானதுமான செயற்பாடுகளால் சாதனைகள் படைத்துக் கல்லூரிக்கும் பழைய மாணவர்களுக்கும் பெருமைசேர்த் துக் கொண்டிருக்கும் அதேவேளை மேன்மேலும் தங்களுக்குள் கட்டுக் கோப்புடனும் ஒற்றுமையுடனும்செய லாற்ற வேண்டும் என்றும் கேட்டு கொண்டதுடன் இலங்கையிலேயே முதன்முதலில் நடைமுறைப்படுத்தப் பட்ட போசாக்குணவுத் திட்டத்தை தொடர்ந்து நடாத்தி மற்றையோ ருக்கு உதாரணமாகச் செயற்பட



வேண்டும் என்றும் கேட்டுக் கொண் டார். அடுத்துப் புதிய நிர்வாக சபை தெரிவு செய்யப்பட்டபோது பின்வரு வோர் 1999-2000 ஆண்டிற்கான நிர்வாக சபைக்குத் தெரிவு செய்யப் பட்டனர்.

காப்பாளர்கள்: டாக்டர் க.சிற்றம்பலம், திரு.க. சிவராமலிங் கம், திரு.வை. சிவநாதன், டாக்டர் பொன் விமலேந்திரன், திரு.சி.மோக னச்சந்திரன்.

தலைவர்: திரு.பொன் பஞ்ச லிங்கம், உபதலைவர்: திரு.பொன் கருணாகரன், செயலாளர்:திரு.க. இளந்திரையன், உபசெயலாளர்: திரு.ப. ஜெயச்செல்வன், பொருளா ளர்: திரு.சி. பூலோகபூரணன்

நிர்வாகசபை உறுப்பினர்கள்

திரு. சி. இளஞ்செழியன், திரு.க. பாஸ்கரன், திரு. ச.தயாளன், திரு. இ. திருவாரூரன், திரு. நா. மகேசன், திரு.து. கந்தஞானி, திரு. க.ஞானச்செம்மல், திரு.க.செல்வ ஞானம், திரு. சா.குமாரதாசன், திரு. ச.மேகவர்ணன் ஆகியோருடன் கௌரவ கணக்குப் பரிசோதகராக திரு.நா. கந்தவேள் அவர்களும் ஏக மனதாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

சங்கத்தின் புதிய தலைவர் திரு.பொன் பஞ்சலிங்கம் அவர்கள் தமதுரையில் கடந்த காலங்களைப் போன்று சங்கத்தின் பாரம்பரியத்தை யும் செயற்பாடுகளையும் தொடர்ந் தும் சிறந்த முறையில் நடை முறைப்படுத்த அனைத்துப் பழைய மாணவர்களும் எதிர்காலத்தில் ஒற்று மையுடனும் ஒத்துழைப்புடனும் செயலாற்ற முன்வரவேண்டும் என் றும் பொதுச்சபையின் தீர்மானங் களைத் தங்கள் நிர்வாகம் சிறந்த முறையில் செயற்படுத்தும் என்றும் தெரிவித்தார். இவரது தந்தையார் காலஞ்சென்ற திரு.பொன்னையா உபாத்தியாயர் அவர்கள் சிறந்த சமூக சேவையாளர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. அவரது பாதை யில் இவரது செயற்பாடுகளும் அமையும் என்று எதிர்பார்க்கப்படு வதுடன் சங்கம் கடந்த காலங் களைப் போன்று மாணவர்களுக்கும் தாயக மக்களுக்கும் நன்கு சேவை யாற்றும் என நம்புகின்றோம்.

-தீவகன்-